திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் நேரடியாக சிறுதொழில்களை ஆரம்பிக்கும் உத்தேசத்தைக் கைவிட்டு விட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏற்கனவே அது ஆய்விலே இல்லை. எனவே அதை விட்டுவிடுகின்ற பிரச்னை எழவே இல்லை.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, கொடைக்கானல் போன்ற மலைப் பிரதேசங்களிலேயிருக்கிற உருளைக் கிழங்கு உற்பத்தி செய்யும் விவசாயிகள் கிலோ 30, 40 பைசாவுக்கு விற்கிறார்கள். ஆனால் வெளியிலே மக்கள் கிலோ ரூ. 2-க்கு வாங்க வேண்டியிருக்கிறது. ஆகவே, உற்பத்தி செய்த உருளைக் கிழங்கு நியாயமான விலைக்குக் கிடைக்க ஒன்று அது பதப்படுத்தப்பட்டு பத்திரமாக இருக்க வேண்டும்; அல்லது, வற்றல், சிப்ஸ் போன்றவைகளைச் செய்யக்கூடிய ஏற்பாடுகள் இருக்க வேண்டும். அது சாதாரண விவசாயிகளை, மலைவாழ் மக்களைப் பாதிக்கும் முக்கியமான தொழில் அல்லவா? ஆகவே, அரசுத் துறையிலே அதற்காக ஒரு தொழிலை ஆரம்பிக்க அமைச்சர் ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் ஏற்கனவே பதில் சொல்லிவிட்டார்.

கீரந்தங்குடி மாரியம்மன் ஆலயத்திற்குச் சொந்தமான புறம்போக்கு நிலங்கள்

*வினா எண். 86—திரு. ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், கீரந்தங்குடியில் உள்ள ஸ்ரீ மாரியம்மன் கோயிலுக்கு புறம்போக்கு நிலங்கள் ஏதும் சொந்தமாக இருக்கின்றனவா?

(ஆ) ஆம் எனில், அதில் வளர்ந்திருந்த நத்தம், இலுப்பை தென்னை போன்ற மரங்களை முறைகேடான முறையில் வெட்டி விற்பனை செய்யப்பட்டு உள்ளதாக அரசுக்கு இதுவரை ஏதேனும் புகார் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் பேரில் அரசு எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) தஞ்சை மாவட்டம் நன்னிலம் வட்டம், கீரந்தங்குடி கிராமம் அருள்மிகு மாரியம்மன் ஆலயத்தின் அனுபவத்தில் மேலாதீட்சமங்கலம் என்னும் இடத்தில் ச.எண். 2/1-ல் 8 சென்ட் நிலம் ஆலயப் புறம்போக்காக இருக்கிறது,

(ஆ) (இ) அரசுக்கு இதுமாதிரி எந்தப்புகாரும் வரவில்லை,

1981 ஜனவரி 29]

திரு. இரெ. இராசமாணிக்கம் ; பேரவைத் தலைவர் அவர்களே. தஞ்சை மாவட்டம், கீரந்தங்குடியில் உள்ள மாரியம்மன் கோவிலுக்குச் சொந்தமான மரங்கள் வெட்டப்படவில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அதற்குப் பக்கத்திலே உள்ள திருக்களம்புத்தூர் கோவிலுக்குச் சொந்தமான இலுப்பை மரங்களை.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்வியை ஒட்டி துணைக்கேள்வி போடவேண்டும். கீரந்தங்குடி மாரியம்மன் கோவிலைப் பற்றிய கேள்வி. இதில் திருக்களம்புத்தூர் கோவில் பற்றிக்கேட்கப் போனால் விடை இருக்காது.

திரு. இரெ. இராசமாணிக்கம் : ஒரே கோவில் நிர்வாகத்தில் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இருக்கலாம். இந்த அரசாங்கத்தின் நிர்வாகத்திலேதான் எல்லாம் இருக்கின்றன. அதற்காக அனைத்தையும் கேட்டுவிட முடியுமா?

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு தலைவர் அவர்களே தஞ்சை மாவட்டம், கீரந்தங்குடியில் உள்ள தென்னை, இலுப்பை போன்ற மரங்கள், அந்த ஆலயத்தினுடைய அறங்காவலர்களால் தவறான முறையில் வெட்டப்பட்டதாக புகார் ஏதும் வரவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இது சம்பந்தமாக தற்போது புகார் கொடுத்தால் உடனடியாக அமைச்சர் நடவடிக்கை எடுப்பாரா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புகார் தற்போது மாத்திரம் அல்ல, எப்போது கொடுத்தாலும் உடனடியாக நடவடிக்கை எடுக்கப் படும்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில், நன்னிலம் வட்டத்தில் வேறு ஏதாவது ஆலயங்களில் இப்படிப்பட்ட மரங்கள் திருட்டுப் போனதாக புகார்கள் வந்திருக்கின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு, ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே' அதற்காக தனியாகக் கேள்வி போட்டால், தகவல் சேகரித்துத் தரப்படும்.

கலைவாணர் அரங்கம், சென்னை.

*வினா எண். 87—திரு. இ. கணேசன்: மாண்புமிகு செய்தி-அற நிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) சென்னை நகரிலுள்ள கலைவாணர் அரங்கில் பல அரிய நாடகங்களை நடத்தும் வகையில் மேடை வசதியினைத் திருத்தி அமைக்கும் உத்தேசம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?